உ

சிவமயம்

தெல்லிப்பழை கிழக்கு - வயலிருப்பைப்பதி

# அருள்மிகு பைரவர் ஆலயம்

*

# குடமுழுக்குச் சிறப்பு மலர்

*

திருப்பணிச் சபை வெளியீடு

03-03-1984

9.152

53

உ
சிவமயம்

நெல்லிப்பழை கிழக்கு, வயலிருப்பைப்பதி

# அருள்மிகு பைரவர் ஆலயம்

## குடமுழுக்குச்

# சிறப்பு மலர்

திருப்பணிச் சபை வெளியீடு

03 - 03 - 1984

உ

சிவமயம்

## திருப்பணிச் சபை

திரு. சி. சங்கரப்பிள்ளை – தலைவர்

,, வே. த. பாலசுப்பிரமணியம் – உபதலைவர்

,, சு. ஏழூர்நாயகம்
,, க. நவரத்தினம் } இணைச்செயலர்


,, க. சுப்பிரமணியம் – பொருளர்

,, த. பொன்னம்பலம்

,, ச. கணநாதன்

,, சு. பரஞ்சோதி

,, நா. தவநாதன்



ஆலயத்தின் முகப்புத் தோற்றம்

உ

# சமர்ப்பணம்

சிந்தனை செய்ய மனமமைத்தேன் செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்தேன் கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்தேன் மெய்யரும்ப வைத்தேன்
வந்தருள் கும்பாபிஷேகந் தரிசிக்க நல்ல கண்களைப் பெற்றேனே.

" அரிது " " அரிது " மானிடராதல் அரிது என மானிடப் பிறவியின் பயன் பேசப்பட்டுள்ளது. மானிடராகிய எமது ஆன்ம ஈடேற்றத்திற்குத் திருக்கோவில்கள் பெரும் பங்களிக்கின்றன.

ஆக்கையாற் பயனென் — அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையாலட்டிப் போற்றியென்னுதவிவ்
ஆக்கையாற் பயனென்-

என்று நாம் பிறவி எடுத்ததன் உறுதியைப் பெறத் திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்தார்கள்.

தெல்லிப்பழை கிழக்கிலே வயலிருப்பை என்னும் பதியிலே காவல் தெய்வமாக அருளாட்சி செய்துவரும் எம் பெருமானின் ஆலயத்தை புனருத்தாரணம் செய்யும் திருப்பணி எமக்கு வாய்க்கப் பெற்றமை நாம் முன் செய்த புண்ணியமே. திருப்பணிச் சபை அமைக்கப்பட்டு பதினைந்து மாத காலத்தில் ஆலயத் திருப்பணி நிறைவேற்றப்பட்டு, 1984 - 01 - 19ம் திகதி குடமுழுக்குக் காணும் வாய்ப்புக் கிட்டியமைக்கு அன்பர்களினது நல்லெண்ணமும் நல்லாதரவுமே காரணமாகும்.

குடமுழுக்கு விழாவின் நினைவாகச் சிறப்புமலர் ஒன்றினை வெளியிட வேண்டுமென்ற விருப்பம் இவ்வாலயத் திருப்பணிச் சபையினருக்கு ஏற்பட்டது. அவ் விருப்பத்தின் விளைவாக இம்மலர் மலர்ந்துள்ளது.

இம் மலரை காக்கும் கடவுளாம் பைரவப் பெருமானின் திருவடிகளில் சமர்ப்பித்து வணங்குகின்றோம்.

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

*வயலிருப்பை பைரவர் ஆலயம்,*
*தெல்லிப்பழை;*
*1984-02-28*

திருப்பணிச் சபையினர்

உ

சிவமயம்

பிரதிஷ்டா பிரதமகுரு

# சிவஸ்ரீ சுவாமிநாத பாலசுந்தரக் குருக்கள் (நயினை)

## வழங்கிய ஆசியுரை

ஆலயம் சென்று வழிபடுவோர் வழிபாட்டின் சின்னமாக விபூதி, சந்தனம், அர்ச்சித்த மலர், என்பவற்றை திருவருட் பிரசாதமாக வீடுகளுக்கு எடுத்துச் செல்வர். அதேபோன்று ஓர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் போன்ற பெரு விழாக்களி லும் பிரசாதமாகவும், நினைவாகவும் கும்பாபிஷேக மலரை (வாடாத மலர்) இல்லங்களில் பாதுகாத்து வைப்பர்.

தெல்லிப்பழை வயலிருப்பைத் திருப்பதியில் கோவில் கொண்ட ஸ்ரீ பைரவப் பெருமான் குடமுழுக்கு விழா மலராக ஆலய திருப்பணிச் சபையினர் வெளியிடும் மலரும் பிரசாத மலராக அமையவும், அதனை அனைவரும் பெற்றுப் பேணவும் வாழ்த்தி அமைகிறேன். அத்துடன் கும்பாபிஷேக, சங்காபி ஷேக விழாக்களையும், திருப்பணி வேலைகளையும் சிறப்பாக நடாத்தி முடித்த பக்தர்கள் அனைவருக்கும் ஸ்ரீ பைரவர் திரு வருளைப் பிரார்த்தித்து நல்லாசிகளை வழங்குகின்றேன்.

நீர்வேலி
29-02-84

சிவஸ்ரீ சுவாமிநாத பாலசுந்தரக் குருக்கள்

உ

பௌராணிக வித்தகர்

# பிரமஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் அளித்த வாழ்த்துரை

## மகிழ்ச்சி மலரட்டும்

இறை வழிபாடு மக்கள் துன்பத்தைப் போக்கவல்லது. மண்ணில் நல்லவண்ணம் வாழ வழிகாட்டுவது சைவசமயம். சமய உண்மைகளைக் கூறும் நூல்களாகிய வேதம், உபநிடதம், திருமுறைகள், புராணங்கள் யாவும் மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்து உயர்நிலையடைய வழி காட்டுவன.

"காற்று இனிமையாக வீசட்டும் நதிகள் இனிமையைப் பெருக்கிக் கொண்டு ஓடட்டும். செடிகொடிகள் இனிமையை அளிப்பனவாய் இருக்கட்டும். இரவும் காலையும் இன்பமாக இருக்கட்டும். பூமியின் புழுதியும் இன்பம் தரட்டும். ஆகாயம், வனவிருட்சங்கள் இன்பம் நிறைந்தவைகளாயிருக்கட்டும்; சூரியன் இன்பம் தரட்டும். பசுக்கள் மதுரமான பாலையளிக்கட்டும்"

என்பது மகா நாராயண உபநிஷத்தில் காணப்படும் வாக்கியங்களாகும். ஞானசம்பந்தரின் "வாழ்க அந்தணர் வானவரானினம்" என்று தொடங்கும் திருப்பாசுரம் இக் கருத்தையே கொண்டது.

"வான்முகில் வழாது பெய்க" என்று தொடங்கி உலகோர் துன்பமற வாழ நல்வழி காட்டுவது கந்தபுராணம்.

சைவம் சிவத்தொடு சம்பந்தமானது. சிவபெருமான் தேவர்கள் அகந்தை நீங்கக்கொண்ட வடிவமே வைரவக் கடவுள். அவர் காவற் தெய்வமாகவும் கூறப்படுவர். எல்லாக் கோயில்களிலும் அர்த்தசாம இறுதிப்பூசை வைரவருக்குரியது.

வயவிருப்பை வைரவ கோவிலைச் சுற்றியிருக்கும் அடியார்கள், அக்கோவிலிற்கு தொடர்புடைய ஏனைய அடியார்களும் சேர்ந்து சமீபத்தில் வைரவப் பெருமானுக்கு புனருத்தாரண கும்பாபிஷேகம் நடத்தினார்கள். வைரவப் பெருமான் பெயரினால் மலர் வெளியிடுகிறார்கள்: அவர்கள் முயற்சி அவர்களுக்கு மாத்திரமல்ல இந்தக் கிராமத்திற்கே, இந்தத் தேசத்திற்கே சுகத்தைக் கொடுத்து மகிழ்ச்சியைப் பெருக்குவதாக.

" ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே "

வ. குகசர்மா

உ

தெல்லிப்பழை, துர்க்காதேவி ஆலய

பரிபாலன சபைத் தலைவர், சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி

# பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

## வழங்கிய ஆசியுரை

திருக்கோயில்களே பக்திநெறிக்கு நல்வாயில்களாகும் அவற்றைச் சேர்ந்து வாழ்த்த வாயும் நினைக்கமட நெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை இறைவனை வழிபடுவதே மனிதப் பிறவியின் மாண்புடைச் செயலாகும். இறைவன் அங்கிங்கெனாதபடி எங்குமுள்ளவனைப் பேசப்பட்டாலும் திருக்கோயிலில் தான் இறைவனை நன்கு உணர முடிகிறது. எனவே திருக்கோயில்கள் மிகப் புனிதமான முறையில் பேணப்பட வேண்டும். இதற்கு வழி காட்டும் பெரு விழாவே குடமுழுக்கு விழாவாகும். ஞானசம்பந்தப் பெருமான் இதனைப் பெருஞ் சாந்தி விழாவென்று போற்றியுள்ளார். இப் பெருவிழா சமீபத்தில் தெல்லிப்பழை கிழக்கு வயலிருப்பை வயிரவர் கோவிலில் நடைபெற்றது. பக்திப் பரவசமான முறையில் ஆனந்தம் பெருக அருள் ஒளிவீச வயிரவப் பெருமானுக்குக் கொட்டும் மழையிலும் குளிர்ந்த குடமுழுக்கு சிறப்பாக நிறைவெய்தியது. இப்பணியில் ஈடுபட்ட திருப்பணிச் சபையினரின் அயரா உழைப்பும் உறைப்பான பக்தியும் மிகமிகப் பாராட்டுக்குரியது. இன்று மண்டலாபிஷேகம் பூர்த்தியடைகிறது. உண்மை அன்பைக் கொட்டி ஓடோடி உழைத்த உத்தம பக்தர்களுக்கும் வயிரவப் பெருமான் திருத்தொண்டர், அடியார் அனைவருக்கும் எனது வாழ்த்தை வழங்கி ஞான வயிரவரின் திருவருட் கடாட்சம் நிரம்பிவழிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
1984-02-28

தங்கம்மா அப்பாக்குட்டி

உ

ஆலய அர்ச்சகர்

# பிரமஸ்ரீ கி. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்கள்

## வழங்கிய ஆசியுரை

# ஆலடியான் என்னும் அருளாளன்

**அ**ன்பர்களினால் பெரும்பாலும் ஆலடியான் என்றும், வயலிருப்பையான் என்றும், கிழவன் என்றும் அன்புரிமையோடு அழைக்கப்படுபவர் இவர். தம்மை மெய்யன்போடு நினைப்பவர்களை அவர்தம் இன்னல்களிலிருந்து காப்பாற்றாது கைவிட்டதாக எவரும் சொன்னதில்லை. நாட்டிலே கோவில்கள் பல இருந்தாலும் ஒரு சிலவே அருளாட்சி கூடுதலாக இருப்பதை அவதானிக்க முடியும். அந்த வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவர் நம்மவர். அடியார்கள் சிலருக்கு, அவர்களுக்கு நிகழக்கூடிய காரியங்களைக் கூறி எச்சரித்து, பாதுகாத்ததாகக்கூட சில சம்பவங்கள் கூறக்கேட்டுள்ளேன். அண்மையில் நடைபெற்ற பாலஸ்தாபனம், கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் சம்பந்தமான நிகழ்ச்சிகளே இதனை உறுதிப்படுத்துவனவாக அமைந்ததைக் கண்டேன்.

ஆலோசனைக் கூட்டத்திற்கு ஆர்வத்தோடு பலரும் வந்து கலந்து கொண்டதும், ஒவ்வொரு துறையிலும் திறமையும், ஆற்றலும் ஒத்துழைப்பும் கொண்டு ஒரு நிர்வாகசபை அமைந்ததும், சபையின் வேண்டுகோளுக்கு ஒவ்வொருவரும் மனங்கோணாது விருப்போடு பணமும், பொருளும் உதவியதும் எம்மால் ஆற்றக்கூடிய ஒன்று அல்ல. ஆரம்பம் தொடக்கம் எந்தவொரு முடிவை எடுக்கும் போதும் "எங்களால் எதுவும் ஆகாது. உனது காரியத்தை நீயே முன்னின்று எங்கள் மூலம் இயக்கிக்கொள்" என்ற வேண்டுதல் நிச்சயமாக இருக்கும்.

1983ம் ஆண்டு தைப்பூச உற்சவத்திலன்று நிதி சேகரிப்பு ஆரம்பம் என்று தீர்மானிக்கப்பட்டது. அன்று தலைவர் அவர்கள் தேங்காய் உடைத்து கர்ப்பூரம் கொழுத்தவும், உற்சவ அபிஷேகத்திற்குச் சங்கற்பம் செய்வதற்கும் குருக்கள் "கணேசாய நம" என்று கூறி மணி ஒலித்தது ஒரு சுப சகுனமாகும். அப்படி ஒரு ஆசியுடன் தொடங்கிய முயற்சி சித்திரையில் பாலஸ்தாபனமும், கட்டடம் யாவும் பூர்த்தியடைந்து 1984 தைப்பூசத்திலன்று கும்பாபிஷேகம் நடத்த முடிந்தது என்றால் இது எம்மால் முடியக்கூடிய காரணம் அல்ல என்பதனை எவரும் ஏற்றுக்கொள்வர். இன்றுவரை திருப்பணிச் சபையின் முடிவுகள் யாவும் எல்லோராலும் ஏகமனதான சம்மதத்துடன் இயங்கியது என்றால் அப்படி இயக்கி வைத்தவரும் அவரே.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து இச்சூழலில் பல நற்காரியங்கள் நிகழ்ந்துள்ளன. கும்பாபிஷேகம் நடந்த 2-3 தினங்களுக்குள் கோவிலுக்கு முன்னால் வசித்த தாய் தந்தையரை இழந்த ஒரு பெண்ணிற்குத் திடீரென விவாகம் நிச்சயமாகி நடந்தது ஒரு உதாரணமாகலாம்.

எமது தலையெழுத்தை நிர்ணயிப்பது பிரமா. பிரமனையே தட்டிக் கேட்டவரும் தண்டித்தவரும் வைரவப் பெருமான் தான். ஆகவே வைரவப் பெருமான் பாதங்களை வாழ்த்தி வணங்கி வருபவர்களை "நாளென்செயும், வினைதானென்செயும் கோளென்செயும் கொடுங்கூற்றென்செயும்" என்று எண்ணலாம்.

இன்னும் எம்பெருமானுக்கு ஒரு திருமஞ்சனக் கிணறும், மடைப் பள்ளியும் விரைவில் அமைய வேண்டும் என்றும், அன்பர்கள் அடியார்கள் எல்லா நலன்களும் பெற்று, எம்பெருமானைப் பேணிப் பரவி வாழவேண்டும் என்றும், அவரது நித்திய நைமித்திய பூசைகள் குறைவின்றி நடக்கவேண்டும் என்றும், இதனை விருப்போடும், ஆசாரத்தோடும் முறையாக நடாத்தி வைக்க எமக்கு ஏற்ற ஊக்கத்தையும், நல்வாழ்வையும் அமைக்கும் படியும், எம்பெருமானை வேண்டுதல் செய்து, அவரது பாதங்களைச் சிரசிற் சூட்டி அவரது நினைவை மனதிற் பதித்து அமைகிறேன்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாது வேறொன் றறியேன்.

தெல்லிப்பழை
29-02-1984


தி. சுந்தரமூர்த்தி ஐயர்

---

முக்கணுந் திங்களேபோல் முளைத்தவாளெயிறும் வன்னிச்
செக்கரஞ் சடையின் சீரும் செயிர்கெழ நகையு மாக
உக்கிர வடிவு கொண்டாங் குதித்திடு வடுகன் தன்னை
மைக்கினர் கண்டத் தெந்தை நோக்கியே வகுத்துச் சொல்வான்:

— கந்தபுராணம்

## ஆதிமூலத்தில் எழுந்தருளியுள்ள வைரவப் பெருமான்



வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடு
அஞ்சனப் புகையென வாலமா மெனப்
செஞ்சுடர் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற்கழல்க ளேத்துவாம்.

உ

# தெல்லிப்பழை கிழக்கு
# வயலிருப்பைப்பதி (ஆலடி)
# அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவ சுவாமி ஆலயம்

ஈழத்தின் வடபால் யாழ்ப்பாண நன்னாட்டிலே - காங்கேசன் துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதி அமைந்துள்ள தெல்லிப்பழை என்னும் வரலாற்றுப் பெருமை வாய்ந்த நகரில் வயலிருப்பைப் பதியில் புராதனச் சிறப்பு வாய்ந்த ஆலயமாக இவ்வாலயம் விளங்கிவருகின்றது.

**தெல்லிப்பழை - வரலாற்றுச் சிறப்பு**

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலைக் கட்டுவித்த மாருதப்புரவல்லி தன் குன்ம நோய் நீங்கி, இளமையும், அழகும் உடையவளாக விளங்கிய காலத்தில் தங்கிய குறிச்சியை உள்ளடக்கிய ஊர் " தல்லிப் பள்ளி " என்பதாகும். அத் " தல்லிப் பளை " மருவியே இன்று தெல்லிப்பழை ஆயது என வரலாற்று வல்லுனர் கூறுவர். தல்லி என்றால் இளமை உடையவள் என்றும் " பள்ளி " என்றால் சிற்றூர் என்றும் பொருளுரைப்பர்.

**ஆலயச் சிறப்பு**

இப்படியான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊரிலே, " வயலிருப்பை " என வழங்கப்படும் குறிச்சியிலே தனியாலயத்தில் மூலமூர்த்தியாக அமர்ந்து காவல் தெய்வமாக வைரவப் பெருமான் அருளாட்சி செய்து வருகின்றார். இவ்வாலயத்தின் தோற்றம் 20ம் நூற்றாண்டின் ஆரம்பம் என அறியப்படுகின்றது. ஆலயமாக மிளிரமுன், பன்னெடுங்காலமாக இவ்வாலய வளவில் அமைந்திருந்த ஆலமரத்தின் கீழ் இருந்த சூலத்தை அடியார்கள் வழிபாடாற்றி வந்தனர். இதனால் " ஆலடி வைரவர் " என்ற பெயர் வழங்கி வரலாயிற்று 1915ம் ஆண்டளவில் இக் கோவிலின் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இப் பெருமான் அற்புதத் தெய்வமெனப் போற்றப்படுகின்றவர்: ஒரு சமயம் இவ்வாலயத்தில் புராண படனம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது விளக்கிற்குரிய எண்ணெய் தீர்ந்த சமயம் அடியார் ஒருவரின் வீட்டிலிருந்து நாய் வடிவில் எண்ணெயை எம்பெருமான் கொணர்வித்தார் என்று பேசப்படுகின்றது.

இவ்வாலயத்தில் விநாயகர், நாகதம்பிரான் மூர்த்தங்களும் உள்ளன.

இவ்வாலயத்தின் அர்ச்சகராக ஆரம்ப காலத்தில் பிரமஸ்ரீ துரைச்சாமி ஐயர் அவர்களும் அதன்பின் அவரது மகன் பிரமஸ்ரீ செல்லையர் அவர்களும் பணிபுரிந்தார்கள்: பின்னர் சில காலம் பிரமஸ்ரீ விஸ்வநாதையரும் அதற்குப் பின் நீண்டகாலமாக பிரமஸ்ரீ சதாசிவ ஐயரும் பணிபுரிந்தார்கள். தற்போது பிரமஸ்ரீ தி: சுந்தரமூர்த்தி ஐயர் அவர்கள் ஆலய அர்ச்சகராகக் கடமையாற்றி வருகின்றார்.

**திருப்பணிச்சபையின் தோற்றமும் பணிகளும்**

1953ல் புனருத்தாரணம் செய்யப்பட்டபின் 30 ஆண்டுகளாக கும்பாபிடேகம் செய்யப்படாத நிலையில் இவ்வாலயம் இருந்ததுடன் ஆலயத்தின் ஆதிமூல மண்டபம் பல சிதைவுகளுக்குட்பட்டு திருத்தப்பட வேண்டிய நிலையிலிருந்தது. இப்போதைய ஆலய அர்ச்சகர் பிரமஸ்ரீ தி: சுந்தரமூர்த்தி ஐயர் அவர்களினதும் ஆலயத்துடன் நெருங்கிய தொடர்புடைய அன்பர்கள் சிலரினதும் முயற்சியால் 1983-01-16ம் திகதி ஆலய புனரமைப்புச் சம்பந்தமானதொரு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆலயத் திருப்பணிகளின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு திருப்

பணிச்சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டது. இத் திருப்பணிச்சபை நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டு கணிசமான தொரு தொகையை மூன்று மாத காலத்தில் திரட்டியதன் விளைவாக இவ்வாலயம் *1983 - 04 - 17*ம் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. பாலாலயத்தை திருப்பணிச்சபை உறுப்பினர் திரு. ச. கணநாதன் அமைத்து உதவினுர். பாலஸ்தாபன கும்பாபிடேகத்தை நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பாலசுந்தரக் குருக்கள் அவர்கள் நடாத்தி வைத்தார்கள். இதன் திருப்பணி வேலைகள் துரிதகதியில் ஆரம்பமாகின. ஆலயத்தின் ஆதிமூல மண்டபமும் நாகதம்பிரான் ஆலயமும் தகர்க்கப்பட்டு புதிதாக அத்திவாரமிடப்பட்டன. இப் பணிகள் யாவும் சிரமதானம் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டன. சிரமதானப் பணியில் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினரின் பங்களிப்பு குறிப்பிடப்படவேண்டிய தொன்ருகும். ஆதிமூலத்திற்கான அத்திபாரம் 83-09-11ம் திகதியும், நாகதம்பிரான் ஆலயத்திற்கான அத்திபாரம் 83-10-21ம் திகதியும் இடப்பட்டன. கட்டிட நிர்மாண வேலைகள் நாளாந்தக் கூலி அடிப்படையில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. சின்னராசா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. கட்டிட நிர்மாண வேலைகளை திருப்பணிச் சபை உறுப்பினர்களான திருவாளர்கள் T. பொன்னம்பலம், திரு. சகணநாதன், பொருளாளர் திரு. க. சுப்பிரமணியம் ஆகியோர் மேற்பார்வை செய்து வந்தார்கள்.

நாகதம்பிரான் ஆலயம் நிறுவிய முழுச் செலவையும் முன்பு அவ்வாலயத்தை நிர்மாணித்திருந்த அமரர் சபாரத்தினம் அவர்களின் மகளான திருமதி சாரதாதேவி சண்முகநாதன் அவர்கள் ஏற்றிருந்தார்கள்.

மூலஸ்தானத்தில் பூஜிக்கப்பட்டு வந்த சூலம் பழுதுபட்டிருந்தமையால் அதனை மாற்றி புதியதொரு சூலம் இப்பொழுது பிரதிட்டை பண்ணப்பட்டுள்ளது. இச்சூலத்தை தமது உபயமாகத் தந்தவர் தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த திருமதி நிர்மலா உருத்திரமூர்த்தியாவார்.


இவ்வாருக இன்று புதிய பொலிவுடன் விளங்கும் இவ்வாலயத்தின் கும்பாபிடேகத்தை கண்களினுல் அவர்தம் நல் விழாக் காணும் பேற்றை கடந்த தைப்பூசத் தினமான தை மாதம் 19ம் திகதி பெற்று மண்டலாபிஷேகத்தைத் தரிசிக்கும் வாய்ப்பை எதிர்நோக்கியுள்ளோம். திருப்பணிச் சபையின் அடுத்த பணிகள் இவ்வாலயத்திற்கு திருமஞ்சனக் கிணறு அமைப்பதும், மடப்பள்ளி நிர்மாணமுமாகும்.

இவ்வாலயத்தின் மேன்மைக்கும், சிறப்புக்கும் " நம்செயலால் ஆவதொன்றில்லை. எல்லாம் அவன் செயல் " என்று எம் வைரவப் பெருமானைப் போற்றுவோம்.

சு. ஏழூர்நாயகம்
க. நவரத்தினம்
இணைச் செயலர் - திருப்பணிச் சபை

எஙினம துயர்த்த அண்ணல் இரும்பவந் துலைப்ப ஏனைப்
பகவர்தம் அகந்தை மாற்றப் பண்ணவர் மதர்ப்புச் சிந்த
மிக பெருங்கருணை தன்னுல் வேத நாயகனுள் ளத்து
மகிழ்வொடு புரிந்தானென்ப வைரவக் கடவுள் தன்னை.

— கந்தபுராணம்



ஆலயத்தில் பிரதிஷ்டை
செய்யப்பட்டுள்ள விநாயகர்

உ

சிவமயம்

# மகா கும்பாபிஷேக மகிமை

**நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்**
**தேடுமின் தேடிச் சிவபெருமான் என்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்திற் கோயிலாக் கொண்மினே.**

இறைவன் திருவருளைப் பெறுவதற்குச் சிறப்பிடமாக விளங்குவன திருக்கோயில்களே. தனி மனிதனுடைய நன்மைக்கும் சமுதாய நன்மைக்கும் ஆலயங்களின் நலன் இன்றியமையாதது ஆகும். ஆகவே நாட்டுக்கு நலம் செய்யக் கருதுவோர் எவரும் ஆலயங்கள் செம்மையுற்று விளங்கவும் அவற்றில் நித்திய நைமித்திக நிகழ்ச்சிகள் குறைவற்று விளங்கவும் ஆவன செய்தல் வேண்டும். ஆலயங்கள் புறக்கணிக்கப்படுமாயின் அது நாட்டிற்கே தீமையை விளைவிக்கும்.

**" ஆற்றரு நோய்மிகும் அவனி மழைகுன்றிப்**
**போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்**
**கூற்றுதைத் தான்திருக் கோயில்க**
**ளானவை**
**சாற்றியப் பூசைகள் தப்பிடில் தானே ".**

என்பது திருமூலர் வாக்கு: உடம்பிற்கு இருதயம் போன்றது ஓர் ஊருக்கு ஆலயமாகும். அகப்பூசையால் உள்ளம் தூய்மையடைவதுபோல் ஆலய வழிபாட்டால் நாடும் கிராமமும் நற்பலனடையும்;

திருக் கோயில்களின் முக்கியத்துவத்தை நோக்கிய மகாமன்னர்கள் தங்கள் அரண்மனைகளை விடத் திருக்கோயில்களையே மிகச் சிறப்பானதாகவும் அழியாதனவாகவும் ஆக்கி வைத்தனர். தங்கள் வெற்றிச் சின்னங்களையும் கலை அழகுகளையும் அவர்கள் தங்கள் அரண்மனை முதலிய இடங்களில் கண்டு மகிழாமல் திருக் கோயில்களிலேயே கண்டு மகிழ்ந்தனர்.

திருக்கோயிலின் அமைப்மை உற்று நோக்கின் அது நமது உடம்பின் அமைப்பையே ஒத்திருப்பதைக் காணலாம்: கர்ப்பக் கிருகம், அர்த்மி மண்டபம், மகா மண்டபம், ஸ்நபன மண்டபம், அலங்கார மண்டபம் சபா மண்டபம் என்னும் ஆறும் முறையே மூலாதாரம், சுவாதிட்டானம்: மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களாக அமையவும் மூன்று ஆவரணங்கள் தூல, சூக்கும, காரண சரீரங்களாகவும் பஞ்ச ஆவரணங்கள் அன்னமயகோசம், பிராண மயகோசம், மனோமய கோசம் விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்பனவாகவும் அமைகின்றன: திருக்கோயில் அமைப்புகள் அனைத்தும் உடம்பின் அமைப்பையே பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. எனவே, நாட்டின் உயிராகத் திருக்கோயில்களும் இறைவனும் காட்சியளிப்பதை யாவரும் அறிவர்: திருக்கோயில்களில் நித்திய நைமித்திகங்கள் செவ்வனே நடைபெறச் செய்வதோடு அவை பழுதடையாமல் அவ்வப்பொழுது திருப்பணிகள் பல செய்தும் மூர்த்திகட்கு அஷ்டபந்தனம் சாத்தியும் கும்பாபிஷேகங்கள் செய்வித்தல் வேண்டும்: அப்பொழுதுதான் கோயில்கள் புத்தம் புதியனவாய் இறைவன் திருவருட்பொலிவை உடையனவாகி விளங்கும்: பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறையேனும் தவறாது கோயில்களில் மூர்த்திகளுக்கு மருந்து சாத்திக் கும்பாபிஷேகம் செய்வித்தல் வேண்டும் என்பது சிவாகம விதி:


கும்பாபிஷேகம் என்பது எல்லா வகையான குறைபாடுகளும் நீங்கி இறைவன் திருவருள் விளக்கம் மேம்பட்டுத் தோன்றுமாறு செய்யும் பெருஞ் சாந்தி

யாகும், இது திருக்கோயில்களில் உரிய காலங்களில் நடத்தப்பெறவேண்டியது இன்றியமையாதது.

மகா கும்பாபிஷேகத்தைச் செய்விப்பவரும் தரிசிப்பவரும் எல்லாவகையான குற்றங்களினும் நீங்கி இறைவன் திருவருளுக்குப் பாத்திரராவார்கள். யந்திர, மந்திர உபாசனு மார்க்கங்களால் வேறு எங்கும் காணுத அற்புத தெய்வீக சக்தியை அனுபவத்தில் கண்டு களித்த நாடு நம்நாடு. தெய்வத் திருவுருவங்களை மந்திர ரூபமாக வைத்து வழிபடுவதாலேயே விசேட பலன் உண்டாகும். அதற்குக் காரணம் மந்திரங்களிலே தெய்வ சாந்தித்தியம் மிகுந்திருப்பதே. தெய்வ வழிபாட்டில் மந்திரம் முதன்மையானதாகவும் அதற்குரிய பாவனையும் கிரியையும் உடன் நிகழ வேண்டுவனவாகவும் அவற்ருல் வழிபடும் இடங்களைக் கும்பம், விம்பம், தம்பம் என மூன்ருகவும் வைதீக சமயங்கள் கூறும். மூன்று வகையில் கும்பத்தில் சிறப்பாக வழிபட்டு அதில் தெய்வீக சக்தி விளங்கப்பெற்ற நீரை விம்ப தம்பங்களுக்கு அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாகும். இதன் முக்கிய அங்கம் இறைவனை யாகத்தில் வழிபடும் அக்கினி காரியமாகும். ஆலயத்தின் அமைப்பைப் போலவே கும்பத்தின் அமைப்பும் பல தத்துவங்களை உடையது. கும்பம் சிவனது திருமேனியாகவும். அவனது அளவற்ற சக்திகளின் சொரூபமாகவும், முப்பத்தாறு தத்துவங்களின் வடிவமாகவும், எல்லாத் தேவர்களின் சொரூபமாகவும், சர்வதீர்த்தங்களின் ரூபமாகவும் அமைகின்றது. யாகசாலையும், யாக குண்டங்கள் முதலியனவும், யாக அக்கினியும் அவ்வாறே பல தேவர்களின் சொரூபமாகவும் தேவ தேவரான சிவபெருமானது அருள்வடிவமாகவும் மற்றும் பலவாருகவும் அமைகின்றன. அவைகளைத் தக்க ஆகம சீலர்களால் முறைப்படி அமைத்து, வேதசிவாகம அத்தியயனம், திருமுறைப்பராயணம், சிவனடியார் தோத்திரங்கள் முதலியவற்ருேடு செய்து கும்பத்திலுள்ள நீரை ஸ்தூல லிங்கமாகிய இராஜகோபுரத்திலும் கோயில் விமானத்தின் உச்சியிலும் சூக்கும லிங்கமாகிய மூலஸ்தான மூர்த்தியின் மேலும் அபிஷேகிப்பதால் தூய்மை பெற்று அவ்விடங்களிம் சிவ சாந்நித்தியம் மிகுந்து விளங்கும்: நித்திய நைமித்திக காமிய வழிபாடுகளுக்கு விசேட பலன்கள் சித்திக்கின்றன: அவைகளை அனுபவத்தில் உணர்ந்தே பெரிய அரசர் முதலான நம் முன்னேர்கள் கும்பாபிஷேகத்தை முதன்மையாகக் கருதிச் செய்து வந்தனர். செய்தும் வருகின்ருர்கள். இத்தகைய சிறந்த மகாகும்பாபிஷேச் சிறப்பு இப்பொழுது இத் திருக்கோவிலில் வாய்த்துள்ளது. நாம் செய்த தவப்பயனுகும்;

சிறந்த சிவபுண்ணியம் :

"செய்தார் சிறக்கச் சிவபுரத்தைச்
சிற்ப வுரையில் திகழ்விதியால்
எய்தார் பிறப்பிற் சிவலோகம்
எய்திப் போகம் இனிதருந்தி
வெய்தாம் வினையும் ஆணவமும்
வீயா மாயை யொடும்விடவே
மெய்யாம் பரம வித்தையுற
விமலன் கமலம் விரவுவரே"



கும்பப் பிரதட்சணம்



[illegible]

உ
சிவமயம்

# கும்பாபிஷேகக் கிரியைகள்

**ஆசார்ய வர்ணம் :**

முதலில் அடியார்கள், ஆலய அறங் காவலர்கள் தமக்கு இவ்விழாவைக் குறை வற நடாத்தி நிறைவுறச் செய்யும் ஓர் ஆசாரியரையும் அவர்மூலம் சாதக போத கர்களையும் தேடிக் கொள்வர். இதுவே ஆசார்ய வர்ணம் எனும் கிரியையாகும். பின்பு குருவானவர் சாதக சிஷ்யர்க ளோடு விழாவெடுக்க இருக்கும் ஆல யத்தை அடைந்து குறைவிலாத் திரவி யங்களோடும், நிறைவுற்ற மந்திரங்க ளோடும் பின்வரும் கிரமத்தில் விழாவை இனிதே செய்வர்.

**விநாயக வழிபாடு :**

விழாவானது இடர்களெதுவுமின்றி இனிது நிறைவேற வேண்டுமென வேண்டி விநாயகரை வணங்கல்.

**சங்கற்பம் :**

விழாவினைக் குறைவற முடிப்பதாகக் குருவும் அறங்காவலர்களும் சேர்ந்து செய்து கொள்ளும் பிரதிக்ஞை.

**திரவிய சுத்தி :**

கும்பாபிஷேக திரவியத்தைச் சுத்தம் செய்தல்.

**கணபதி ஹோமம் :**

விக்கினம் தீர்க்கும் விநாயகனுக்குச் செய்யப்படும் விழா. இது பெரிய அள விற் செய்யப்பட்டு முடிவிற் பிரார்த்தனை செய்யப்படும்.

**அனுஞ்ஞை :**

இறைவனிடம் விழா தொடங்க அனு மதி பெறல்.

**கிராம சாந்தி, பிரவேசபலி :**

நகரத்தில் உள்ள துர்தேவதைகளைப் பலிகள் மூலம் திருப்தி செய்து நகரை யும் ஆலயத்தையும் இரட்சிக்குமாறு அட் டதிக்குப் பாலகர்களையும் பைரவரையும் வேண்டுதல்.

**இரக்ஷோக்ன ஹோமம், திசாஹோமம் முத லிய :**

இரக்ஷோக்ன தேவதையை வழிபட்டு கிழக்கே சிவாஸ்திர தேவரையும், தெற்கே அகோரஸ்திர தேவரையும், மேற்கே பாசுபதாஸ்திர தேவரையும், வடக்கே பிரத்தியங்கிரி தேவரையும் ஸ்தாபித்தல்.

**வாஸ்து சாந்தி :**

யாக சாலையையும், ஆலயத்தையும் சுத்தி செய்வதற்காக வாஸ்து புருஷனைப் பூசித்தல்.

**மிருத்சங்கிரகணம் (மண் எடுத்தல்) :**

முளைப் பாலிகை போடுவதற்காக பூமாதேவியிடமிருந்து மந்திரபூர்வமாக மண் எடுத்தல்.

**அங்குரார்ப்பணம் (முளையிடுதல்) :**

"பண்ணிய புண்ணியம் பயிரினில் தெரியும்" என்ற முதுமொழிக்கேற்பச் செய்யும் பலாபலன்களை அறிவதற்காகச் சந்திரனை வழிபட்டு முளையிடல்.

**ஆசார்ய ரட்சாபந்தனம் (காப்புக் கட்டல்) :**

ஆசாரியரையும் ஏனையோரையும் இடர்களிலிருந்து பாதுகாப்பதற்காகக் கட்டப்படும் காப்பு.

**பிரசன்ன பூசை :**

கும்பத்தில் எழுந்தருளுவதற்காகப் பிம்பத்தில் இறைவனைப் பூரண கலைக ளோடு பிரசன்னமாகுமாறு வேண்டப் படும் விசேட பூசை.

**கடஸ்தாபனம் :**

மந்திரங்களோடு குடத்தில் நூல் சுற்றி, வாசனை திரவியங்கள், நவரத்தி னங்கள் முதலியவையிட்டு, நீர் நிரப்பிக் கும்பத்தை உருவாக்குதல்.

**கலாகர்ஷணம் :**

விம்பத்திலிருந்து இறைவனைக் கும்பத்துக்கு எழுந்தருளுவித்தல்.

**யாகசாலைப் பிரவேசம் :**

கும்பத்தை வேத, திருமுறை பாராயணங்கள் ஒலிக்க, மங்கல வாத்தியம் முழங்க, யாகசாலைக்கு எடுத்துவந்து விசேஷமாக விதிமுறைப்படி அமைக்கப்பட்ட மேடையில் வைத்தல்.

**விசேஷ சந்தி :**

பிரதான ஆசாரியரும் மூர்த்தியர்களும் தாம் செய்யும் ஜபங்கள், ஆகுதிகள் அனைத்தும் இறைவனை அடையவேண்டும் என்ற நோக்குடன் காயத்திரி ஜபம் செய்து தர்ப்பணங்கள் செய்தல்.

**யாக பூசைகள் :**

யாகத்தில் பூசை, அக்கினி காரியம், தீபாராதனை, வேத திருமுறை பாராயணங்கள் ஆதியன காலக்கணக்கில் நடைபெறும்.

**தீபஸ்தாபனம் :**

நெய்யினால் தீபமேற்றி அர்ச்சித்து, தீபத்தைச் சுமங்கலிப் பெண் கைகளால் தாங்கி வீதியை வலம் வரும்படி செய்து மூலஸ்தானத்தில் வைத்தல்.

**இரத்தின ஸ்தாபனம் :**

விக்கிரகம் ஸ்தாபிக்கப்படவிருக்கும் பீடத்தில் இருக்கும் குழிகளில் நவரத்தினங்கள், தானியங்கள், உலோகங்கள் ஆகியவற்றைத் தனித்தனியே உரிய உரிய மந்திரங்களுடன் வரிசையாக வைத்தல்.

**யந்திர ஸ்தாபனம் :**

பொற் தகட்டில் யந்திரம் எழுதிப் பூசித்து, அதனைப் பீடத்தில் வைத்தல்.

**பிம்பஸ்தாபனம் :**

விக்கிரகத்தை (பிம்பம்) பீடத்தில் ஸ்தாபித்தல்.

**அஷ்டபந்தனம் :**

சுக்கான்கல், குங்குலியம், செம்பாக்கு, தேன்மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, எருமை வெண்ணெய், சாதிலிங்கம் ஆகிய எட்டுத் திரவியங்களின் சேர்க்கை அஷ்டபந்தனமாகும். இத் திரவியங்களை நன்கு இடித்துப் பீடமும் விக்கிரகமும் நன்கு ஒன்றி இணையும் வண்ணம் சாத்துதல் வேண்டும்.

**எண்ணெய்க் காப்பு :**

பக்த ஜனங்கள் சுவாமிக்கு எண்ணெய் சாத்துதல்.

**பிம்பசுத்தி :**

விக்கிரகத்தைச் சுத்தி செய்தல்.

**சுவாமி ரக்ஷாபந்தனம் :**

விக்கிரகத்துக்குக் காப்புக் கட்டுதல்.

**நியாசம் :**

விக்கிரகத்தில் அங்கங்களைப் பதித்தல்.

**ஸ்பர்சாகுதி :**

யாகசாலையில் உள்ள அக்கினி, கும்பம் இவற்றோடு விக்கிரகத்திற்கு நூலினால் தொடர்பு ஏற்படுத்தி எட்டு மூர்த்திகளையும் ஆகுதி செய்து, விக்கிரகத்தில் சுவாமியை எழுந்தருளச் செய்யத் தயார் செய்தல்.

**பூர்ணாகுதி :**

யாகத்தை நிறைவு செய்தல்.

**மகா கும்பாபிஷேகம் :**

பிரதான கும்பத்தில் உள்ள மூர்த்தியை விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்தல்.

**தசதரிசனம் :**

மங்களமான பத்துப் பொருட்களைச் சுவாமிக்குக் காண்பித்தல். அதாவது பசு, ஆசாரியர், வேதம் அறிந்தவர், கண்ணாடி, பூரணகும்பம், தீபம், கன்னி, கணிகை, எஜமானர், சிவபக்தர்கள் ஆகிய பத்து வகையும் தசதர்சனமாகும்.

தொடர்ந்து மஹாபிஷேகம் அலங்கார விசேடபூசை, சுவாமி வீதிவலம், ஆசாரியர் சம்பாவனை, திருக்கலியாணம் என்பவற்றோடு கும்பாபிஷேகவிழா நிறைவுபெறும். நாற்பத்தெட்டு நாட்கள் மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா நிகழவேண்டும். இக் கிரியைகளை ஆலயத்தில் செம்மையாக நிகழ்த்துவதால் சர்வமங்கள சுபம் யாவருக்கும் கிட்டுகிறது.

# வைரவக் கடவுள் போற்றி

நலமுடை அடியார் தங்கள்
நலிவுறும் துன்பம் நீக்கி
தயவுடைத் தெய்வ மாகி
தரணியோர் மூன்றும் காத்து
மையலது அகற்றும் நாயாம்
நான்மறை யூர்தி யேறி
வயலிருப் பைப்பதி வாழும்
வைரவக் கடவுள் போற்றி.

மூன்றெனும் பாசம் நீக்கும்
மூவிலைச் சூல மேந்தி
மூன்றெனும் புவனி யுள்ளோர்
மூலமாம் அகந்தை நீக்கி
ஆன்றநல் அன்பின் மேலோர்
அறிவினில் ஒளியாய் வைகி
வான்திகழ் செல்வம் நல்கும்
வைரவக் கடவுள் போற்றி.

மின்னொளிர் மேனி தன்னில்
மேவிருள் போர்வை சாத்தி
மென்மலர் மாலை யென்ன
விண்ணவர் சிரங்கள் தாங்கி
பொன்னலர் அரைஞான் கச்சாய்
பொற்புறு அரவம் மின்ன
மன்னியே அருளை நல்கும்
வைரவக் கடவுள் போற்றி.

பௌராணிக வித்தகர்
வ. குகசர்மா

உ

சிவமயம்

# வல்வினை போக்கும் வைரவக் கடவுள்

முன்னொரு காலத்திலே தேவர்களுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. 'பிரமா, விஷ்ணு, உருத்திரன்' என்று மும் மூர்த்திகள் இருக்கிறார்களே இவர்களுக்குள் முதல்வர் யார் என்பதே அந்தச் சந்தேகம். தேவர்களுக்குள் பலவித அபிப்பிராயங்கள் எழுந்தன. ஒருவர் பிரமா என்றார். மற்றவர் திருமால் என்றார். மற்றொருவர் இவர்களிருவரும் இல்லை சிவபெருமானே முழு முதற் கடவுள் என்றார். யாவரும் ஒன்றுசேர்ந்து ஒரு முடிவிற்கு வரமுடியவில்லை. இறுதியில் பிரம தேவரைக் கேட்போம் என்று யாவரும் மேருமலை உச்சியில் உள்ள பிரமலோகத்திற்குச் சென்றார்கள். அங்கே திருமாலும் பிரமாவுடன் கூட இருந்தார்.

அங்கு சென்ற தேவர்கள் வணங்கி தமது சந்தேகத்தை அவர்களுக்குக் கூறினார்கள். பிரமதேவர் மாயையில் கட்டுப்பட்டவராக 'தாமே மூவரில் முதல்வர்' என்று தேவரிடம் கூறினார். திருமால் அதனை ஏற்கவில்லை. 'பிரமதேவரின் தந்தையாகிய தாமே மூவரில் முதல்வர்' என்று கூறினார். இதனால் இருவருக்கும் தர்க்கம் ஏற்பட்டது. கோபம் வந்தது. சண்டை செய்ய ஆயத்தமானார்கள். தேவர்கள் இதனைக் கண்டு அச்சம் கொண்டு ஓடி விட்டார்கள். இந்த நிலையைக் கண்ட சிவபெருமான் சோதியாய் முதலில் இவர்கள் முன்தோன்றிப் பின் திருக்கைலையில் உமையாளொடு வீற்றிருக்கும் கோலத்தோடு தோன்றினார். அவரைக் கண்டவுடன் திருமால் நல்லறிவு வரப் பெற்று வணங்கினார்.

பிரமதேவரோ சிவபெருமானையும் இகழத் தொடங்கினார். அப்பொழுது சிவபெருமானில் நின்று வைரவக் கடவுள் தோன்றினார். அவருடைய தோற்றத்தை பின்வருமாறு கந்தபுராணம் எடுத்துக் கூறுகிறது.

நீலுறு சுடரின் மெய்யும்
நெருகிழிகள் அரற்றும் தாளும்
ஆலம துயிர்க்கும் செங்கேழ்
அரவவெற்றரையும் சென்னி
மாலைகள் அநந்த கோடி
வயின்வயின் பெயரு மார்பும்
சூலமும் பாசும் நாணும்
துடியும் ஏந்திய பொற்றோளும்

மேற்கூறிய கோலங்களுடன் மூன்று கண்களும் சந்திரப்பிறைபோன்ற வக்கிரகந்தப் பற்களும் சிவந்த சடையும் கோபச்சிரிப்பும் பொருந்திய உக்கிர வடிவம் எனக் கூறப்பெற்றுள்ளது.


அவர் சிவபெருமானது கட்டளைப்படி பங்கயாசனனாகிய பிரமதேவருடைய ஒரு தலையைக் கிள்ளினார். பின் ஏனைய அகந்தை கொண்ட தேவர்கள் முனிவர்களிடக்கிற் சென்று அவர்கள் இரத்தத்தைப் கானமாகப் பெற்று அவர்கள் மனத்தை பரிசுத்தமாக்கினர் என்பது வரலாறு.

வேதங்களை நாயுருவாக்கி அதன்மேல் ஏறிவருபவர். இரவிலே ஆலயங்களில் இறுதி வழிபாடு வைரவக் கடவுளுக்கேயாம். இவர் ஆலயத்தைப் பாதுகாப்பவராகக் கருதப்படுகிறார்.

சிவபெருமானது திருக்குமாரர்களாக விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திரர் ஆகிய நால்வர் கூறப்படுகின்றார்கள். இவர்கள் நால்வரும் வெவ்வேறு காரணங்களுக்காக உற்பவித்தாலும் யாவரும் சிவபெருமானது பல்வேறு தோற்றங்களே என்பது வேதங்களும் புராணங்களும் கண்டமுடிவு.

எனவே வைரவக் கடவுளை வணங்குவதனால் நமக்கு வரும் தீங்குகளை நீக்கி சகல விருப்பங்களையும் பெறுவதுடன் சிவபெருமானை வணங்கும் பலனையும் அடைவோம் என்பது உறுதி.

சு. ஏழூர்நாயகம்



எழுந்தருளி

தெல்லிப்பழை-வயலிருப்பை

# வைரவ சுவாமி திருவூஞ்சல்

## காப்பு

பொன்னொளிரு யீளவள நாட்டின் மேவிப்
பூமகளும் நாமகளும் பொருந்தி யின்பம்
மன்னுபுகழ் யாழ்ப்பாணத் தெல்லி தன்னில்
வளமிருந்தே மாண்பு நிறைந் தோங்குசெல்வம்
தன்னிலுயர் வயலிருப்பை வைரவர் மேல்
தண்டமிழாற் றிருவூஞ்சல் சாற்றி யேத்தக்
கண்ணுதலார் பிரணவத்துக் கடவு ளான
கணபதிதன் பாதமலர் காப்பதாமே.

## நூல்

திருவோங்கு நால் வேதம் தம்பமாகச்
சிறந்தசிவா கமங்கள் மேல் விட்டமாக
மருவோங்கு மாறங் கந் தாம்பதாக
வளர்கலைகள் ரத்னமணிப் பலகையாக
தருமாதி நான்கு முயர் சிங்கமாகத்
தாங்கியொளிர் பிரணவவொண் பீடமீதில்
கருணைமிக வயலிருப்பைப் பதியில் வந்து
காட்சிதரும் வைரவரே யாடீரூஞ்சல். 1

தேசொளிரும் நவரத்னக் கிரீடம் மின்னத்
திகழ்திருநீற் றொளிநுதலிற் றிகழ்ந்துமன்ன
வாசமிகு மார்பகத்தே மதாணி கண்டி
மருவுமுயர் யோகபட்டம் மருவித்துன்ன
மாசகற்றுந் திருப்பாதம் சிலம் பொலிப்ப
மறையொலியின் மகிழ்ந்தடியார் குதூகலிப்பப்
பூசனைக்கே அருள்புரிந்து காக்குஞ் சீலப்
புங்கவரே வைரவரே யாடீரூஞ்சல். 2

சந்திரனுஞ் சூரியனுங் குடைகள் தாங்க
சாமரையை வாயுவெடுத் திரட்டி நிற்ப
இந்திரனு ராலவட்ட மெடுத்தே யேந்த
இருபாலும் விசிறிகொடு வருணன் வீசக்

கொந்தலர் பூந்தண்டேந்திக் குபேரன் போற்றக்
குதுகலித்தே யக்கினி கண்ணடிகாட்ட
வந்தனை செய்யடியவர்கள் மிடியே போக்கும்
வயலிருப்பை வைரவரே யாடீரூஞ்சல். 3

அணியாக வமரர் குலந்தொழுது வாழ்த்த
அன்பர்கள் தம்பண்களிசை யமையப் போற்றக்
கணியாரு நால்வேதம் மறையோ ரோத
கந்தருவர் தும்புரு நாரதர்கள் பாடப்
பணியாக வாகமங்கள் ஆய்ந்து தேரும்
பக்திமிகு மாதிசைவர் பூசை செய்ய
மணியாரும் வயலிருப்பைப் பதியின் மேவி
மகிழ்வு தரும் வைரவரே யாடீரூஞ்சல். 4

மாலயனுர் மருவி வடம் பிடித்தேயாட்ட
மாமுருகன் மலர்க்கரத்தால் மகிழ்ந்தேயாட்ட
கோல மருப் பொன்றுடையான் குளிர்ந்தேயாட்டக்
கொற்றவையு மருகணைந்து குலவியாட்ட
சீலமுறு முனிவர் கணந் தெரிந்தேயாட்ட
சிந்தை மகிழ்சீரடியார் சேர்ந்தேயாட்ட
வாலறிவன் கருணைமிக வயங்குந் தெல்லி
வயலிருப்பை வைரவரே யாடீரூஞ்சல். 5

தும்புருவர் நாரதர்கள் வீணை பாட
தூய சுர வாத்தியத்தோர் மேளம்பாட
பம்பிய சீர்ப் பாவையர் நாட்டியங்களாடப்
பாவலரும் நாவலருந் தமிழ்ப்பாப் பாட
நம்புமிசை யாளரெலாந் தோத்ரம் பாட
நாதமிகு வேத மறையவர்கள் பாட
வம்பலருஞ் சோலைமிகு தெல்லி மேவும்
வயலிருப்பை வைரவரே யாடீரூஞ்சல். 6

ஆய்ந்த மலர்மாலை தொடுத்தணிவா ரோர்பால்
அன்புமிக வைந்தெழுத்துஞ் செபிப்பா ரோர்பால்
தோய்ந்து திருமஞ்சள் நீர்சுமப்பா ரோர்பால்
தூய திருவலகு மெழுக் கமைப்பாரோர்பால்
ஏய்ந்த விள்க்கிடுவார் சங்கிசைப்பா ரோர்பால்
இன்னிசையில் மயங்கி மகிழ்க் திடுவாரோர்பால்
வாய்க்கதிருத் தெல்லிதனில் வண்மை நல்கும்
வயலிருப்பை வைரவரே யாடீரூஞ்சல். 7

காரி வைரவ சித்த ஆடீரூஞ்சல்
கருங்குதிரை யாளி முத்த ஆடீரூஞ்சல்
ஞாளியனே சூலதர ஆடீ ரூஞ்சல்
நன்மை தர வருபவரே யாடீரூஞ்சல்
சூழு மிடி தீர்த்திடுவீ ராடீரூஞ்சல்
சோதி மிகு பாலகரே யாடீரூஞ்சல்
நாளு முயர் வயலிருப்பைப் பதியில்மேவும்
நாயகரே வைரவரே யாடீரூஞ்சல். 8

பூசை மடை புரிபவர்தம் துயரம்போக்கிப்
பொன்னுடன் நன்மணி தருவீ ராடீரூஞ்சல்
தேசமெல்லாம் புகழ்கீர்த்தி மேன்மை தந்து
தீய மிடி போக்கிடுவீ ராடீரூஞ்சல்
வாசமிகு மருள்வளத்தால் துயரம் போக்கி
வாகை தரவரு பவரே யாடீரூஞ்சல்
நேசமிகு மடியவரை நிதமுங் காக்கும்
நிமல சித்த ஞானியரே யாடீரூஞ்சல். 9

விண்ணுலகர் துன்ப மெல்லாம் பொடியேயாக
வீறுடனே மாவலி பாலுலகங் கொண்ட
மண்ணை யுண்டோன் மமதையொழித்தருளி மற்று
மலரவனின் சிரங்கொய்து மயக்கம் போக்கி
எண்ணமிலார் தலையோட்டிற் குருதி தாங்கி
எங்கு மருள் வழங்கிவினை நீக்கிக்காத்து
மண்ணுலகோர் மகிழ் பூப்பத் தெல்லிமேவும்
வயலிருப்பை வைரவரே யாடீரூஞ்சல். 10

வாழி

அந்தணர்கள் வாழி சுரர் ஆன்கள் வாழி
அருமறைகள் வாழி சிவாகமங்கள் வாழி
செந்தமிழார் திருமுறைசேர் சைவம் வாழி
செங்கோன்மை யரசுநெறி சிறந்து வாழி
சுந்தரமார் நீறு கண்டி துலங்கிவாழி
தூய சிவமந்திர வைந்தெழுத்தும் வாழி
வந்து பொழி மழைவாழி வயலிருப்பை
வைரவனார் திருப்பாதம் வாழி வாழி. 11

— தெல்லியூர் கவிஞர் நா. ஆறுமுகம்

உ

கணபதி துணை

# சிவாலய தரிசன விதி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் செய்தது

### 1. சைவசமயிகள்

அநாதி முத்த சித்துருவாகிய முதற் கடவுள் சிவபெருமானே என்று துணிந்து, அவர் அருளிச் செய்த வேதாகமங்களில் விதித்தபடி, தங்கள் தங்கள் வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்கும் ஏற்ப அவரை மெய்யன்போடு வழிபடுவோர் சைவசமயிகள் என்று சொல்லப்படுவர்.

### 2. சிவபெருமான் எழுந்தருளியுள்ள இடங்கள்:

கருணாநிதியாகிய சிவபெருமான், புறத்தேதிருக் கோயிலுள்ளிருக்கும் சிவலிங்கம் முதலிய திருமேனியும் தமது மெய்யடியாருடைய திருவேடமும் ஆதாரமாகக்கொண்டு நின்றும், இங்குள்ளார் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். ஆதலால் அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம்.

### 3. சைவாசாரமும் வழிபாட்டு அங்கங்களும்:

சிவத்திரவியங் கவராமை, கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, பிறர்கனை நயவாமை, வரைவின் மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகள் இவ் வழிபாட்டுக்கு அங்கங்களாம். இவ்வழிபாடு அங்கியாம். ஆதலால்' இந்நன்மைகள் இல்லாது செய்யும் வழிபாடு சிறிதும் பயன் படாதென்பது துணிவு.

### 4. கட்டாயம் அணியவேண்டிய சிவசின்னங்கள்:

இவ்வழிபாடு செய்யும் சைவசமயிகளாலே தரிக்கற்பாலனவாகிய சிவசின்னங்கள் விபூதியும் உருத்திராட்சமுமாம். இவைகளைத் தரியாது செய்யும் சிவபுண்ணியங்கள் சிறிதும் பயன்படாவாம்.

### 5. பலவிதமான சிவலிங்கங்கள்.

திருக்கோயிலுள்ளிருக்கும் சிவலிங்கம் பரார்த்தலிங்கம் எனப் பெயர்பெறும். அது சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிதலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம், என ஐந்துவகைப்படும். அவற்றுள் சுயம்புலிங்கம் தானே தோன்றியது. காணலிங்கம் விநாயகர், சுப்பிரமணியர் முதலிய கணங்களாலே தாபிக்கப்பட்டது. தைவிகலிங்கம் விட்டுணு முதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது. ஆரிடலிங்கம் இருடிகளாலே தாபிக்கப்பட்டது. அசுரர், இராக்கதர்களாலே தாபிக்கப்பட்டதும் அது. மானுடலிங்கத்தின் உயர்ந்தது ஆரிடலிங்கம், அதனின் உயர்ந்தது தைவிகலிங்கம், அதனின் உயர்ந்தது காணலிங்கம், அதனின் உயர்ந்தது சுயம்புலிங்கம்.

### 6. சுற்றுப்பிரகாரம் என்னும் ஆவரணங்கள்:

திருக்கோயிலிலே கர்ப்பக்கிருகத்தினுள்ளே சிவலிங்கப்பெருமானைச் சூழ்ந்தவிடம் முதலாமாவரணம், அதற்கப்பாலுள்ளது இரண்டாமாவரணம், அதற்கப்பாலுள்ளது மூன்றாமாவரணம், அதற்கப்பாலுள்ளது நான்காமவரணம், அதற்கப்பாலுள்ளது ஐந்தாமாவரணம், அதற்கப்பால் ஊரின்புறம் ஆறாமாவரணம். பிரதட்சிணபலம் முதலாவரணத்திலும் பார்க்க இரண்டாமாவரணத்தும், இரண்டாமாவரணத்தினும் பார்க்க மூன்றாமாவரணத்தும், மூன்றாமாவரணத்தினும் பார்க்க நான்காமாவரணத்தும், நான்காமாவரணத்தினும் பார்க்க ஐந்தாம் ஆவரணத்தும், ஐந்தாம் ஆவரணத்தினும் பார்க்க ஆறாமாவரணத்தும் அதிகமாம்.

### 7. பூசை செய்பவர் யோக்கிய முறை:

படைப்புக்காலத்திலே சதாசிவமூர்த்தியுடைய ஐந்து முகங்களினின்றும் தோன்றிய காசிபர் முதலிய ஐந்திருடிகளுடைய கோத்திரத்திலே பிறந்த ஆதிசைவராகிய சிவப்பிராமணர்களுள்,

மனக்குற்றங்களும் உடற்குற்றங்களும் இல்லாதவர்களாய், சமய தீட்சை, விசேஷ தீட்சை, நிருவாண தீட்சை, ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றவர்களாய், வேதாகமங்களை ஓதி யுணர்ந்தவர்களாய், நித்தியம், நித்தி யாங்கம், நைமித்திகம், நைமித்தியாங் கம், காமியம், காமியாங்கம் என்னும் ஆறுகருமங்களையும் மந்திரம், பாவனை, கிரியை என்னும் மூன்றும் வழுவாவண் ணம் சிரத்தையோடு விதிப்படி செய்ய வல்லவர்களாய் உள்ள சிவாசாரியர்களே பரார்த்தலிங்கபூசை செய்தற்கு அதிகா ரிகள். இவர்களல்லாத பிறர் பரார்த் தலிங்கத்தைத் தீண்டினும், அரசனுக்கும் உலகத்துக்கும் கேடு விளையும்.

பூசகராகிய சிவாச்சாரியர் கிழக்கு நோக்கிய சந்நிதியிலும் தெற்குநோக்கிய சந்நிதியிலும் வலப்பாகத்தும், மேற்கு நோக்கிய சந்நிதியிலும் வடக்கு நோக் கிய சந்நிதியிலும் இடப்பக்கத்தும் நின்று பூசைசெய்ய வேண்டும்.

மனக்குற்றங்களும் உடற்குற்றங்க ளும் இல்லாதவர்களாய் சமயதீட்சை, விசேஷதீட்சை, நிருவாணதீட்சை என் னும் மூன்றும் பெற்றவர்களாய் சைவாக மங்களையும் சிவபுராணங்களையும் கற்ற றிந்தவர்களாய், சிவபக்திமான்களா யுள்ள சைவர்களே திருக்கோயிலை நடாத் துதற்கு அதிகாரிகளாவர். இம்மைப்பய னுகிய திரவிய முதலியவற்றைக் குறி யாது கோயிலைச் சிரத்தையோடு விதிப் படி நடாத்துவோர் இம்மையிலே சிவ கீர்த்தியைப் பெற்றுப் பின்பு சிவபதத்தை அடைவர். இம்மைப்பயனைக் குறித்து அதிகாரங்களைப் பண்ணிச் சிவத்திரவியங் களைத் திருடுவோரும், முந்தின படித்த ரங்களைக் குறைத்தவரும் தண்டிக்கப் படுவர்.

திருக்கோயிலிலே காலந்தோறும் பூசை முதலியவை தவறுமல் விதிப்படி செய்யப்படல் வேண்டும். தவறினுல் இராசாவுக்கும் உலகத்தாருக்கும் தீங்கு விளையும்.

சைவசமயிகள் நடோறும் திருக் கோயிலிற் சென்று, சிரத்தையோடு விதிப்படி சிவதரிசனஞ் செய்துகொண்டு, வீட்டுக்குத் திரும்பல் வேண்டும்.

**8 திருக்கோயிலுக்குப் போகின்றவருக்குரிய ஆசாரம்:**

சிவதரிசனஞ் செய்ய விரும்புவோர் சிவாலயத்துக்குச் சமீபத்தில் உள்ள சிவ தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ் செய்து, கரையிலேறி, சரீரத்திலே உள்ள ஈரத்தை உலர்ந்த வஸ்திரத்தி னுலே துவட்டி, நெற்றியில் விபூதி தரித்து, குடுமியை முடிந்து, ஈரக்கௌபீ னத்தைக் களைந்து, உலர்ந்த கௌபீனந் தரித்து, கைகள் இரண்டையுஞ் சுத்தி செய்து, தோய்த்துலர்ந்தனவாய்க் கிழி யாதனவாய், வெள்ளியனவாய் உள்ள சுத்தவஸ்திரம் இரண்டு அரையிலே தரித்து, அனுட்டானமும் செபமும் முடித்துக்கொண்டு, திருக்கோயிலுக்குப் போகக்கடவர். ஸ்நானம் முதலிய நிய மங்கள் இல்லாது திருக்கோயிலுக்குப் போவோர் சிவநிந்தகரை ஒப்பர்.

திருக்கோயிலுக்குப்போகும்பொழுது ஒரு பாத்திரத்திலே தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை முதலியன வைத்து, அரைக்குக் கீழ்ப்படாது மேலே உயர்த் தப்பட்ட கையில் ஏந்திக்கொண்டு திருக் கோயிலுக்குப் போகக்கடவர்; சிவபெரு மானையும், சிவாக்கினியையும் ஆசாரிய ரையும் சேபிக்கப்போகுமிடத்து, வெறுங் கையுடனே போகாது, தம்மாலே கொடுத்தற்கியன்ற பதார்த்தத்தை அவர் சந்நிதியிலே வைத்து வணங்குதலே தகுதி. பொருளில்லாதவன் பத்திர புட் பங்கள் கொடுத்து வணங்கல் வேண்டும். அதுவுங் கூடாதவன் சந்நிதியில் உள்ள செத்தை முதலியவற்றைப் போக்கி வணங்கல் வேண்டும்.

திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக் கொண்டு உள்ளே பிரவேசித்து பத்திர லிங்கமாகிய பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம்பண்ணக்கடவர்.

**9. நமஸ்காரம் செய்யவேண்டிய முறைகள் :**

ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் பண்ணல் வேண்டும். திரயாங்க நமஸ்காரம் இருவருக்கும் பொது.

அட்டாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். திரயாங்க நமஸ்காரமாவது சிரசிலே இரண்டு கைகளையுங் குவித்தல்.

நமஸ்காரம், மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டு தரமாயினும் பண்ணல் வேண்டும். ஒரு தரம் இருதரம் பண்ணுதல் குற்றம்.

நமஸ்காரம் பண்ணுமிடத்து மேற்கேயாயினும், தெற்கேயாயினும் கால் நீட்டல் வேண்டும். கிழக்கேயாயினும், வடக்கேயாயினும் கால்நீட்டலாகாது.

கிழக்கு நோக்கிய சந்நிதியிலே பலிபீடத்துக்கு அக்கினி மூலையிலும், தெற்கு நோக்கிய சந்நிதியிலும், மேற்கு நோக்கிய சந்நிதியிலும் பலிபீடத்துக்கு நிருதி மூலையிலும், வடக்கு நோக்கிய சந்நிதியிலே, பலிபீடத்துக்கு வாயுமூலையினும், சிரசை வைத்து மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும், இடக்கையை பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்கி நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்து, நமஸ்காரம் பண்ணக்கடவர்.

பின்பகலிலே சூரியகிரகணமாயினும், சங்கிராந்தியாயினும்வரின் அப்பொழுது தரிசனஞ் செய்யப் போனவர் மேற்கே கால் நீட்டலாகாமையால் தெற்கு நோக்கிய சந்நிதியிலும் வடக்கு நோக்கிய சந்நிதியிலும் அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணாது, திரயாங்கநமஸ்காரம் மாத்திரம் பண்ணல் வேண்டும்.

**10. பிரதட்சிணம் பண்ணவேண்டிய முறை :**

மேற்சொல்லியபடி நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு, சிவபெருமானைச் சிறிதும் மறவாத சிந்தையோடு செபமாலையைக் கையில் வைத்துப் பஞ்சாக்கர செபஞ்செய்துகொண்டாயினும், இரண்டு கைகளையும் இருதயத்திலே குவித்துக் கொண்டாயினும், பூரண கர்ப்பிணியானவள் காலிலே விலங்கு பூட்டப்பட்டவளாய் எண்ணெய் நிறைந்த குடத்தை சிரசின் மேல் வைத்துக்கொண்டு நடத்தல் போல, செந்துகள் வருந்துமேயென்று மனம் உருகிப் பூமியைப் பார்த்துக் கொண்டு கால்களை மெல்ல மெல்ல வைத்துப் பிரதட்சிணம்பண்ணக் கடவர்;

சிவபெருமானை மூன்று தரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பதினைந்துதரமாயினும் இருபத்தொருதரமாயினும் பிரதட்சிணம்பண்ணல் வேண்டும்.

விநாயகரை ஒருதரமும், சூரியனை இரண்டு தரமும், பார்வதி தேவியாரையும் விட்டுணுவையும் நான்கு தரமும் பிரதட்சிணம் பண்ணல் வேண்டும்.

பிரதட்சிணம் பண்ணும் ஆவரணத்திலே தூபி நிழலேனும், துசத்தம்ப நிழலேனும் இருப்பின் அந்நிழலிலே மூன்று கூறுநீக்கி எஞ்சிய இரண்டு கூற்றினுள்ளே செல்லக்கடவர். கடவுள் உற்சவங்கொண்டெழுங் காலத்திலே உடன் செல்லும் பொழுது அந்நிழலிருப்பின் நீங்காது செல்லலாம்.

**11. நமஸ்காரம் பண்ணலாகாத வேளைகள்:**

அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்திலே பிரதட்சிணம் நமஸ்காரம் முதலானவை பண்ணலாகாது.

**12. வலம் வரவேண்டிய முறைகள் :**

பிரமசாரிகள் வலமாக வரக்கடவர். கிருகத்தரும் வானப்பிரத்தரும் வலமும் இடமுமாக வரக்கடவர். சந்நியாசிகள் இடம் வரக்கடவர். வலஞ் செய்தலினாலே போகமும், இடஞ் செய்தலினாலே போக மோட்சமும் உண்டாகும்.

**13. மிகவும் புனிதமான இடம் :**

வலமு மிடமுஞ் செய்தல் கர்ப்பக்கிருகத்தில் என்று சுவாயம்புவத்திலே சொல்லப்பட்டது. கர்ப்பக்கிருகத்துப் பிரதட்சிணம் பூசகராகிய சிவப்பிராமணருக்கு மாத்திரம் விதிக்கப்பட்டது. கர்ப்பக்கிருகத்திலே சிவலிங்கச்சாயையையும், நிருமாலியத்தையும், சோமசூத்திரத்தையும் கடவாது வலமிடஞ் செய்தல் வேண்டும்; கர்ப்பக்கிருகத்தில் வலமும், வெளிப்பிரகாரங்களில் வலமும் செய்தல் வேண்டும் என்று காலோத்திரத்தில் விதிக்கப்பட்டது.

**14. குறுக்கே போகலாகாது :**

தாம் பிரதட்சிணம் பண்ணும் ஆவரணத்தில் உள்ள பலிபீடத்தையும் இடபத்தையும் சேர்த்துப் பிரதட்சிணம்பண்ணக் கடவர். தாம் பிரதிட்சிணம் பண்ணும் ஆவரணத்தில் பலிபீடமும் இடபமும் இல்லையாயின் அதற்கு வெளிப்பிரகாரத்தில் உள்ள பலிபீடத்தையும் இடபத்தையும் சேர்த்துப் பிரதட்சிணம்பண்ணக் கடவர். சிவலிங்கத்துக்கும் அந்த அந்த ஆவரணத்தில் உள்ள பலிபீட இடங்களுக்கும் இடையே போகலாகாது. இப்படிக் காலோத்திராகமத்தில் சொல்லப்பட்டது.

**15 நந்திதேவரிடம் அனுமதி**

மேற்சொல்லியபடி பிரதட்சிணம் பண்ணிச் சந்நிதானத்திலே நமஸ்காரம் செய்து, எழுந்து கும்பிட்டு, துவாரபாலகரை வணங்கி, பின் கணநாயகராகிய திருநந்திதேவரை வணங்கித் துதித்து, ''பகவானே, உம்முடைய திருவடிகளை அடைந்த அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசித்துப் பயன் பெறும் பொருட்டு அனுமதி செய்தருளும்'' என்று பிரார்த்தித்துக்கொண்டு, உள்ளே போகக் கடவர்.

**16. விநாயகரை வணங்குதல் :**

முன்னே விக்கினேசுரருடைய சந்நிதியை அடைந்து இருகைகளையுங் குவித்து அவரைத் தரிசித்து மனசிலே தியானித்து, முட்டியாகப்பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மும்முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு மும்முறை தாழ்ந்தெழுந்து, தோத்திரம்பண்ணக் கடவர்.

**17. தோத்திரம் பாடித்துதித்தல் :**

பின்பு இருகைகளையுஞ் சிரசிலே குவித்துக்கொண்டு சிவபெருமானுடைய சந்நிதியை அடைந்து, அவரைத் தரிசித்து மனசிலே தியானித்து, சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலி செய்து, மனங்கசிந்துருகி, உரோமஞ் சிலிர்ப்ப, ஆனந்த அருவி சொரிய, முப்பத்திரண்டு இராகங்களுள் அவ்வக் காலத்துக்கு ஏற்ற இராகத்துடனே தோத்திரங்களைச் சொல்லக் கடவர்.

**18. தோத்திரங்கள் எவை என்பது :**

உத்தமோத்தமமாகிய தோத்திரங்கள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் அருட்பாட்கள் ஐந்துமாம்.

**19. அருச்சனை**

சிவபெருமானைப் பூசகரைக்கொண்டு வில்வத்தினாலே அருச்சனை செய்வித்து, விதிப்படி சுத்திசெய்யப்பட்ட பழம் முதலியவற்றை நிவேதிப்பித்து, கர்ப்பூராத்திரிகம் பணி மாறப்பண்ணி, பூசகருக்கு இயன்ற தட்சிணை கொடுக்கக்கடவர்.

**20. அவரவர்க்குரிய இடங்கள்:**

சிவப்பிராமணர்கள் கர்ப்பக்கிருகத்திலும், பிராமணர்கள் அர்த்தமண்டபத்திலும், க்ஷத்திரியர் மகா மண்டபத்திலும் புகுந்து, சிவமூல மந்திரத்தினாலே புஷ்பாஞ்சலி செய்யக்கடவர், வைசியர்

இடபத்துக்கு முன்னும், சூத்திரர் இடபத்துக்குப் பின்னும், கோமயத்தினுலே சதுரச்சிரமாக இடம்பண்ணி, சிவமூல மந்திரத்தினுல் அருச்சிக்கக்கடவர். இப்படி அஞ்சுமான் என்னும் ஆகமத்திலே சொல்லப்பட்டது.

**21. வழிபடும் மூர்த்தங்கள்:**

பின்பு சபாபதி, தட்சிணுமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும் சமயாசாரியர்கள் நால்வரையும் தரிசித்து வணங்கித் துதிக்கக்கடவர்.

அதன்பின் பார்வதிதேவியாருடைய சந்நிதியை அடைந்து, சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலி செய்து, அவரைத் தரிசித்து, மனசிலே தியானித்து, அருச்சனை முதலியன செய்வித்து, தோத்திரங்களைச் சொல்லக்கடவர்.

**22. சண்டேசுரர் வணக்கம்:**

இறுதியில் விபூதி வாங்கித் தரிசித்துக்கொண்டு, பிரதட்சணஞ் செய்து சண்டேசுரர் சந்நிதியை அடைந்து வணங்கித் தோத்திரஞ் செய்து, தாளத்திரயம் பண்ணிச் சிவதரிசன பலத்தைத் தரும் பொருட்டுப் பிரார்த்திக்கக்கடவர்.

**23. வீழ்ந்து வணங்குதலும், தியானஞ் செய்தலும்:**

அதன்பின் நந்திதேவரை அடைந்து வணங்கித் துதித்து, பலிபீடத்துக்கு இப்பால் வந்து, மும்முறை நமஸ்கரித்து, எழுந்து வடக்கு நோக்கி இருந்து சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு, பஞ்சாட்சரத்தில் இயன்ற உருச்செபித்து, எழுந்து வீட்டுக்குப் போகக்கடவர்.

**24. மீளுதல்:**

தரிசனஞ்செய்து திரும்பும்பொழுது சிவபெருமானுக்கும் இடபதேவருக்கும் புறங் காட்டாது திரும்பல் வேண்டும்.

**25. வெவ்வேறு வேளைகளில் வணக்கம்:**

சிவதரிசனம் பிராதக்காலத்திலே செய்தால் இரவிலே செய்த பாவம் போம். மத்தியானத்திலே செய்தால் பிறந்தநாட்டொடங்கிச் செய்த பாவம் போம். சாயங்காலத்திலே செய்தால் ஏழுபிறவிகளிற் செய்த பாவம்போம். ஆதலால் சைவசமயிகள் யாவரும் எந்நாளும் காலந்தோறும் தவருமல் விதிப்படி மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்யக்கடவர்.

**26. கட்டாயம் வழிபடவேண்டிய காலங்கள்:**

சோமவாரம், அட்டமி, பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, உத்தராயணம், தட்சிணயனம், சித்திரைவிஷு, ஐப்பசிவிஷு, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி முதலிய புண்ணிய காலங்களிலே சிவதரிசனஞ் செய்தல் மிக மேலாகிய சிவபுண்ணியம்.

**27. வழிபாட்டின் உயர்ந்த பலன்:**

சிவபெருமானை மனசினுலே தியானித்துக்கொண்டும் பஞ்சாட்சரத்தை வாக்கினுலே உச்சரித்துக் கொண்டும் சூரியோதயந்தொடங்கி அஸ்தமய பரியந்தமாயினும் ஒருயாமமாயினும் அங்கப்பிரதட்சிணம் செய்தவர் தீவினைகள் எல்லாவற்றினின்றும் நீங்கி முத்தியை அடைவர்.

**28. சோமசூத்திரப் பிரதட்சிணம்:**

இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, சென்றவழியே திரும்பிவந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும், வலமாகச்சென்று வடதிசையைச்சேர்ந்து, கோமுகையைக் கடவாது முன் சென்றவழியே திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, அங்கு நின்றும் திரும்பி, இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, அங்கு நின்றும் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசியாது இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து பின்பு சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்குதல் சோமசூத்திரப் பிரதட்சிணம் எனப் பெயர்பெறும். பிரிந்து வரும்பொழுது

ஆன்மப் பிரதட்சிணம் பண்ணல் வேண்டும்: இப்படி ஒரு பிரதட்சிணஞ் செய்யின், அநந்தமடங்கு பயனுண்டு. இந்தப் பிரதட்சிணம் பிரதோஷ காலத்திலே செய்யின், மிக விசேடமாம்.

“தெரிசித்துத் திடவிடையைச்
சென்றிடஞ்சண் டேசன்
திருவடியைத் தெரிசித்து
மீண்டுதிட விடையைத்
தெரிசித்துச் சென்றுவலஞ்
சோமதிசை சேர்ந்து
மீண்டிடபந் தெரிசித்துத்
திகழ்சண்ட னடியைத்
தெரிசித்துப் பராசத்தி யெனுஞ்
சோமஞ் சேர்ந்து
மீண்டு திறற் சண்டனடி
தெரிசித்து விடையைத்
தெரிசித்துச் சிவலிங்கந்
தெரிசித்துப் பணிக
விது சோம சூத்திரமொன்
றனந்தபலஞ் செயுமே”
—அருணகிரி புராணம்

### 29. பிரதோஷகால வழிபாடு:

சுக்கிலபட்சம் கிருஷ்ணபட்சம் என்னும் இரண்டு பட்சத்தும் வருகின்ற திரயோதசி (பதின்மூன்றும்) திதியிலே சூரியஸ்தமயனத்துக்குமுன் மூன்றே முக்கால் நாழிகையும் பின் மூன்றேமுக்கால் நாழிகையுமாய் உள்ள காலமே பிரதோஷம் எனப்படும்.

விட்டுணு முதலிய தேவர்கள் தாங்கள் திருப்பாற்கடல் கடைந்தபோது ஆலகாலவிஷம் தோன்றக் கண்டு அஞ்சி ஒட்டமெடுப்ப, அது அவர்களை வலமும் இடமுமாக மறித்துத் தொடர்ந்தது: அவர்கள் திருக்கைலாயத்திற்குச் சென்று இடபதேவருடைய அண்டத்தில் ஒளித்தார்கள்: அவர்களை ஆலகால விடம் பின்தொடர்ந்து வரும்போது சிவபெருமான் இடபதேவருடைய இரண்டு கொம்பின் நடுவே இருந்து அவ்விஷத்தைத் திருக்கரத்திலேற்று உட்கொண்டு, அவர்களைக் காத்து, அக்கொம்பின் நடுவே நின்று நிருத்தஞ் செய்தருளினர்: இது சனி வாரத்திலே திரயோதசி திதியிலே சாயங்காலத்திலே அர்த்தமண்டலசமயத்திலே நிகழ்ந்தது ஆதலால் சனிப்பிரதோஷம் மிகச்சிறந்தது:

இப்பிரதோஷ வரலாறு வேறொரு வகையாகவும் சொல்லப்படும்: ஏகாதசியின் மாலைக்காலத்தில் சிவபெருமான் ஆலகால விஷத்தை உண்டு தேவர்களைக் காத்தருளினர். துவாதசியிலே அமிர்தந் தோன்ற, தேவர்கள் அதை உண்டு, திரயோதசியின் மாலைக் காலத்திலே சிவபெருமானைப் பூசித்து வணங்கினர்கள்: அப்பொழுது சிவபெருமான் இடபத்தின் மேனின்று அருள்செய்தார். இப்பிரதோஷத்திலே இடபதேவருடைய அண்டத்தைப் பரிசித்து, அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடு கூட ஹரஹர என்று சொல்லி, சிவபெருமானைத் தரிசித்தல் வேண்டும்:

### 30. பிரதோஷ விரதத்தின் பயன்:

பிரதோஷ காலத்திலே மெய்யன்போடு சிவதரிசனஞ்செய்யின்; கடன், வறுமை, நோய், பயம், கிலேசம் அவமிருத்து, மரணவேதனை, பாவம் என்னும் இவைகளெல்லாம் நீங்கும், முத்தி சித்திக்கும்.

### 31. திருக்கோயிலில் செய்யத்தகும் சிவபுண்ணியங்கள்:

திருக்கோயிலிலே செய்யத்தரும் சிவபுண்ணியங்களாவன: நாடோறும் சூரியன் உதிக்குமுன் எழுந்து ஸ்நானஞ் செய்து அனுட்டானம் முடித்துக் கொண்டுவந்து மெல்லிய மார்ச்சனியினலே கிருமிகள் சாவாமல் மேற்படத் திருவலகிடுதலும், ஈன்றணிமையதும் நோயினது மல்லாத பசுவினது சாணியைப் பூமியில் விழுமுன் இலையில் ஏற்ருயினும், அது கூடாதாயின் சுத்த நிலத்திலே விழுந்த சாணியை மேல் கீழ் தள்ளி நடுப்பட எடுத்தாயினும், வாவி நதி முதலியவற்றில் வடித்தெடுத்துக் கொண்டுவந்த நீரோடு கூட்டித் திருமெழுக்குச் சாத்தலும், திரு நந்தவனத்திலே விதிப்படி

பூக்களைக் கொய்து பழுது நீக்கித் திருமாலை கட்டிச் சிவபெருமானுக்குச் சாத்துவித்தலும், சிவசந்நிதியிலே தமிழ் வேதத்தைப் பண்ணோடு பாடுதலும், அதனைச் சாரங்கியில் ஏற்றி வாசித்தலும், சிவதோத்திரங்களைச் சொல்லிக் கைகொட்டி ஆனந்தக் கூத்தாடலும், சுகந்ததூபம் இடுதலும் திருவிளக்கேற்றுதலும், சிவபுராணங்களை வாசித்துப் பொருள் சொல்லுதலும், அதனைக் கேட்டலும், பிரகாரங்களில் உள்ள புல்லைச் செதுக்குதலும், தங்கள் தங்கள் செல்வத்துக்கு ஏற்பத் திருப்பணியும் பூசையுஞ் செய்வித்தலும் பிறவுமாம்.

**32. திருக்கோயிலிற் செய்யத்தகாத குற்றங்கள்**

திருக்கோயிலிற் செய்யத்தகாத குற்றங்களாவன ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், சனனசௌசமரணசௌசத்தோடு போதல், எச்சிலுமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்குநீர் சிந்துதல், அபானவாயு விடுதல், பாக்கு வெற்றிலை உண்டல், தம்பலமுமிழ்தல், போசனபானம் பண்ணுதல், நித்திரை செய்தல், சௌரம் பண்ணுவித்துக்கொள்ளுதல், எண்ணெய்தேய்த்தல், தலைபார்த்தல், மயிர் கோதி முடிதல், சூதாடல், சிரசிலே வேட்டி கட்டிக் கொள்ளுதல், தோளிலே உத்தரீயமிட்டுக் கொள்ளுதல், போர்த்துக்கொள்ளுதல், சட்டையிடுதல், வாகனமேறிச்செல்லுதல், குடைபிடித்துக் கொள்ளுதல், உன்னததானத்திலிருத்தல், ஆசனத்திருத்தல், தூபி துசத்தம்பம் பலிபீடம் இடபம் விக்கிரகம் என்னும் இவற்றின் சாயையை மிதித்தல், விக்கிரகத்தையும் நிர்மாலியத்தையுந் தீண்டுதல், திருவிளக்குச் சாயையிலும் சிவலிங்கச் சாயையிலும் தன்னிழலிடுதல் பெண்களைப் புகழ்தல், பெண்களைத் தீண்டல், பெண்களை இச்சித்துப் பார்த்தல், தெற்கு நோக்கிய சந்நிதியிலும் கிழக்கு நோக்கிய சந்நிதியிலும் இடப்பக்கத்தில் நமஸ்காரமும் செபமுஞ் செய்தல், ஒருதரம் இருதரம் நமஸ்கரித்தல், ஒருதரம் இருதரம் வலம் வருதல், ஓடி வலம் வருதல், சிவபெருமானுக்கும் இடபதேவருக்கும் குறுக்கே போதல், அவர்களுக்குப் புறங்காட்டுதல், ஒருகைகுவித்தல், அகாலத்திலே தரிசித்தல், சிவபெருமானுக்கும் பலிபீடத்துக்கும் இடையே நமஸ்கரித்தல், வீண் பேசுதல், அசப்பியம் பேசுதல் அசப்பியங் கேட்டல், சிரித்தல், வீண் கீதம் பாடல் வீண்கீதங் கேட்டல், தேவத்திரவியத்தை இச்சித்தல், கீழ் மக்களைப் புகழ்தல், மேன்மக்களை இகழ்தல், துர்த்தேவதைகளை வழிபடுதல், சிவபெருமானை முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் இடப்பக்கத்தும் நின்று வணங்குதல், திருவிளக்கவியக்கண்டும் தூண்டா தொழிதல், திருவிளக்கில்லாத போது வணங்குதல், குரவர் முதலியோரை வணங்குதல் முதலியனவாம்.

சிவதீர்த்தம் திருநந்தவனம் திருமடம் என்னுமிவைகளிலும் மலசலங்கழித்தல், எச்சிலுமிழ்தல், மூக்குநீர்சிந்துதல், புணர்ச்சி முதலிய அசுசிகளைச் செய்யலாகாது. இக்குற்றங்களுள் ஒன்றை அறியாது செய்தவர் உருத்திரஞ் செபிக்கின் அக்குற்றம் நீங்கும். உருத்திரத்துக்கு உரியரல்லாதவர் அகோர மந்திரத்தில் ஆயிரம் உருச்செபிக்கின் அக்குற்றம் நீங்கும். இக்குற்றங்களை அறிந்து செய்தவர் நரகத்தில் விழுந்து வருந்துவர். அவருக்குப்பிராயச்சித்தம் இல்லை.

**33. தூரத்து யாத்திரிகளுக்குச் சில விதிகள்**

தூரத்திலிருந்து சிவஸ்தல யாத்திரை செய்ய விரும்பினோர் சுபதினத்திலே ஸ்நானஞ்செய்து, நித்தியகர்மங்களை முடித்துக் கொண்டு, கல்வியறிவொழுக்கங்களாற் சிறந்த சற்பிராமணர் முன்னே கையிலே பவித்திரஞ்சேர்த்தி, 'சிவக்ஷேத்திர யாத்திரை செய்யக் கடவேன்' என்று சங்கற்பஞ்செய்து, சிவனடியார்களைத்திருவமுது செய்வித்து, தரும நெறியால் வந்த பொருளைக் கைக்கொண்டு, வீட்டினின்றும் புறப்பட்டு, காமம் குரோதம் முதலிய தீக்குணங்கள் எல்லாவற்றையும் முற்றக் கடிந்து, பரான்னம் புசித்தலும், பிறர் கைப்பொருளை வாங்குதலும் இல்

லாது, நாடோறும் பஞ்சாட்சர செபம் சிவபூசை தேவார பாராயணம் சிவதரிசனம் சிவபுராண சிவரணம் மகேசுர பூசை முதலியவற்றைச் செய்துகொண்டு செல்லக் கடவர். இப்படிச் சென்று தாங் குறித்த சிவஸ்தலத்தை அடைந்து தூரத்தே கோபுரத்தை நமஸ்கரித்து எழுந்துசென்று, அத்தினத்தில் உணவொழிந்து, க்ஷௌரம் பண்ணுவித்துக் கொண்டு, விதிப்படி ஸ்நானஞ் செய்து, பிண்டப்பிரதானம் பண்ணி உத்தம பாத்திரமாகிய பிராமணருக்குத் தம்மால் இயன்ற தானஞ் செய்து, திருக்கோயிலிற் சென்று விதிப்படி சிவதரிசனம்பண்ணி, சிவபெருமானுக்குத் தம்மாலியன்ற திரவியங்கள் கொடுத்து வணங்கக் கடவர்.

### 34. தானஞ் செய்தல்:

தானம் வாங்குதற்கு உரிய உத்தம பாத்திரமாவார், வேதாகமங்களையும் சிவ புராணங்களையும் ஓதி உணர்ந்தவர்களாய், பாவங்களை முற்றக் கடிந்தவர்களாய், சந்தியாவந்தனம் சிவபூசை முதலிய கருமங்களைத் தவறாமல் விதிப்படி சிரத்தையோடு செய்பவர்களாய், இல்லறத்தில் வாழ்பவர்களாய் வறியவர்களாய் உள்ள பிராமணர்கள், இவர்களல்லாத பிறருக்குத் தானம் செய்தவர், பத்துப்பிறப்பு ஒந்தியாயும், மூன்று பிறப்புக் கழுதையாயும், இரண்டு பிறப்புத் தவளையாயும், ஒருபிறப்புச் சண்டாளராயும், பின் சூத்திரராயும் வைசியராயும், அரசராயும், பிராமணராயும், பிறந்து வறுமையினாலும் நோயினாலும் வருந்தி உழலுவர். ஆதலால் உத்தமபாத்திரமாகிய பிராமணருக்கே தானஞ் செய்தல் வேண்டும். அத்தலத்தில் உத்தமர் இல்லையாயின், தம்மாலியன்ற பொருளை, வேறு தலத்துள்ள உத்தமரைச் சுட்டிச் சங்கற்பித்து உதகங்கொடுத்து, அவரிடத்துக்குக் கொண்டுபோய்க் கொடுத்தல் வேண்டும். அவர் இறந்தாராயின் அவர் புத்திரருக்குக் கொடுத்தல் வேண்டும். அவரும் இறந்தாராயிற் சிவபெருமானுக்குக் கொடுத்தல் வேண்டும்.

### 35. வழிபாட்டின்பின் செய்யத்தகுந்தவை :

மூன்று நாளாயினும், ஐந்து நாளாயினும், பதினைந்து நாளாயினும், ஒரு மாசமாயினும், ஒருவருடமாயினும், அத்தலத்திலே நாடோறும் சிவதீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணி, சிவபூசையும் சிவாலயதரிசனமும் இயன்றமட்டும் மகேசுர பூசையும் செய்து கொண்டும், சைவ நூல்களை ஆராய்ந்துகொண்டும், வசிக்கக்கடவர். பொருளில்லாதவர் சிவனடியார்களுக்கு ஒரு முட்டி பிச்சையாயினும் கொடுத்து உண்ணக்கடவர். தாங்குறித்த நாளெல்லை கடந்தபின், சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, திருக்கோயிற் புறத்துவந்து, கோபுரத்தை நமஸ்கரித்துச்சென்று, திருவெல்லையை நமஸ்கரித்து முன்சொன்ன நியமத்துடனே தம்மூரை அடைந்து பிராமண போசனமும் மகேசுர பூசையும் செய்யக்கடவர்.

### 36. பேரின்பத்தை பெற்றுய்யும் வழி:

பெறுதற்கரிய மனிதப் பிறப்பை உடையர்களாய், மெய் நூல்களாகிய வேதாகமங்கள் வழங்கும் புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்திலே தவஞ் செய் சாதியிலே சைவமரபிலே பிறந்தும், அநேகர் இவைகளின் அருமையைச் சிறிதும் சிந்தியாதும், கருணாநிதியாகிய சிவ பெருமானுடைய மகிமையையும், புண்ணிய பாவங்களையும், அவர்களின் பலன்களையும், கற்றாயினும் கேட்டாயினும் அறியாதும், பாவங்களை வெறுத்துப் புண்ணியங்களைச் செய்யாதும், தமது வாழ்நாள் வீணாளாகக்கழித்து, எரிவாய் நரகத்துக்கு இரையாகின்றார்கள். சிலர் ஒரோவழிச் சில புண்ணியங்களைச் செய்யப் புகுந்தும், அவைகளைச் செய்யும்முறை சிறிதும் அறியாமல், குளிக்கப்போய்ச் சேறு பூசிக் கொள்ளுதல் போல, பாவத்தையே ஈட்டிக்கொள்கிறார்கள். இப்படிக் கெட்டுப் போகாது, நமது சைவசமயிகள் இம்மனிதப்பிறப்புப் பெறுதற்கரிய தென்பதையும், இது நீங்கும் அவதி அறிதற்கரிய தென்பதையும் சிந்தித்து, இந்தப்பிரபந்தத்தை வாசித்தறிந்து பாவங்களை வெறுத்து, சிவபெருமானுடைய திருவடிகளைத் தங்கள் மனம் வாக்குக்காயங்களினாலேவிதிப்படி மெய்யன்போடு வழிபட்டு நித்தியமாகிய பேரின்பத்தைப் பெற்றுய்யக் கடவர்கள்.

" கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னாப்
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல்பொலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்ச
மவனடிமைக்கி ழடிமைபுகு மடிமையே யடிமை "

— பிரமோத்தரகாண்டம்

---

உ

சிவமயம்

## திருநாவுக்கரசு நாயனார்

### திரு அங்கமாலை


திருச்சிற்றம்பலம்

கைகாள் கூப்பித்தொழீர்
கடிமாமலர் தூவிநின்று
பைவாய் பாம்பரையார்த்த பரமனை
கைகாள் கூப்பித்தொழீர்

ஆக்கையாற் பயனென்
அரன்கோயில் வலம் வந்து
பூக்கை யாலட்டிப் போற்றி யென்னாதவிவ்
ஆக்கையால் பயனென்.

கால்க ளாற் பயனென்
கறைக்கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்களாற் பயனென்.

திருச்சிற்றம்பலம்



நாகதம்பிரான் ஆலயம்

# எமது நன்றிக்குரியோர்

★ இவ்வாலயத்தின் புனர் நிர்மாணத் திருப்பணியை ஆற்றவேண்டுமென இத் திருப்பணிச் சபையைத் தெரிவு செய்த ஆலயத்தைச் சார்ந்த அன்பர்கள்.

★ திருப்பணிக்கும் கும்பாபிடேகத்திற்கும் நிதியுதவி, பொருளுதவி, வாகனப் போக்குவரத்து உதவி வழங்கியோர்.

★ இத் திருப்பணியை ஆரம்பிக்கும்போது ஆலோசனை வழங்கியும் பின்னர் தேவையான சந்தர்ப்பங்களில் எம்மை நெறிப்படுத்தியும் கும்பாபிடேக தினத்தன்று வாழ்த்துரை வழங்கியும், இம்மலருக்கு ஆசியுரை வழங்கியும், மலரை வெளியிட்டும் வைத்த துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகச் சபைத் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

★ கட்டட வரைபடத்தைத் தயாரித்துத் தந்த கோண்டாவில் சோமசுந்தர ஸ்தபதியர்.

★ பாலாலயத்தை நிர்மாணித்து உதவிய திரு. ச. கணநாதன் அவர்கள்

★ பாலஸ்தாபன கும்பாபிடேகத்தையும், மகா கும்பாபிடேகத்தையும், சிறப்புடன் நிறைவேற்றித் தந்த நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பாலசுந்தரக் குருக்கள், பிரதிஷ்டா சிவாச்சாரியர்களாக இருந்து கும்பாபிடேகத்தை சிறப்புடன் நடாத்திய தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலய ஆதீனகர்த்தர் சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள், பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய ஆதீன கர்த்தர் சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள், சர்வசாதகர் இணுவில் ஸ்ரீ மகாதேவ சர்மா, வேத பாராயணம் செய்த தெல்லிப்பழை துர்க்கா வேதாகமப் பாடசாலை மாணவர்கள், ஏனைய அந்தணர்.

★ கட்டட நிர்மாணத்தை மிகுந்த சிறப்பாகவும், ஒழுங்காகவும், பயபக்தியுடன் நிறைவேற்றித் தந்த வட்டுக்கோட்டை திரு. சின்னராசா அவர்களும், அவரது குழுவினரும்.

★ கட்டிட நிர்மாணத்திற்கு ஆரம்ப அளவு எடுத்துத் தந்த சிதம்பர ஸ்தபதிகள் திரு. இராமமூர்த்தி, திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்.

★ திருப்பணி வேலை ஆரம்பித்த நாட் தொடக்கம், அவ்வப்போது வேண்டிய வேண்டியாங்கு சிரமதானப் பணிபுரிந்த தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர், ஏனையோர்;

★ நாகதம்பிரான் ஆலயத்தை நிர்மாணித்துதவிய, தெல்லிப்பழை திருமதி சாரதாதேவி சண்முகநாதன் அவர்கள்;

★ ஆதிமூலத்தில் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட வைரவர் சூலத்தைத் தமது உபயமாகத் தந்துதவிய திருமதி நிர்மலா உருத்திரமூர்த்தி அவர்கள், சூலத்தை உருவாக்கிய யாழ்ப்பாணம் திரு. கந்தசாமி ஆசாரி அவர்கள்.

★ கும்பாபிடேகத்திற்கு நாள் குறித்துத் தந்தும், ஏனைய ஆலோசனைகளை வழங்கியுமுதவிய மயிலணி சீதாராம சாஸ்திரி அவர்கள்.

★ கும்பாபிடேக தினத்தன்று அருளுரை வழங்கியும் கும்பாபிடேகத்தைத் தொடர்ந்து 11 தினங்களுக்கு கந்தபுராண விரிவுரை நிகழ்த்தியும், மலருக்கு ஆசியுரை, கவிதை ஆகியன வழங்கியுமுதவிய பௌராணிக வித்தகர் பிரமஸ்ரீ குகசர்மா அவர்கள்.

★ கும்பாபிடேக தினத்தன்று பண்ணிசைக் கச்சேரிகள் நிகழ்த்திய இசைமணி செல்லத்துரை அவர்கள், சங்கீதபூஷணம் திருமதி விஜயலட்சுமி ஆறுமுகசாமி மற்றும் பக்கவாத்திய கலைஞர்கள்;

★ இத்திருப்பணி ஆரம்பித்த நாள்முதல், திருப்பணி வேலைகளுக்கு நாள் குறித்தல், பாலஸ்தாபன, கும்பாபிடேக, மண்டலாபிடேக ஒழுங்குகளைச் சிறப்புடன் மேற்கொண்ட துர்க்கா வேதாகமப் பாடசாலை அதிபர் பிரமஸ்ரீ வி. நாராயண சர்மா அவர்கள்.

★ இவ்வாலயத்தின் திருப்பணிக்கு அத்திபாரமிட்டு, ஒவ்வொரு கருமத்திலும் எமக்கு உறுதுணையாக விளங்கி வரும் ஆலய அர்ச்சகர் பிரமஸ்ரீ தி: சுந்தரமூர்த்தி அவர்கள், அவரது புதல்வர்கள்.

★ இவ்வாலயத்தின் பாவனைக்கும், கும்பாபிடேகத்திற்கும் வேண்டிய பொருட்கள் சிலவற்றைத் அன்பளிப்பாகத் தந்துதவிய துர்க்காதேவி ஆலய நிர்வாக சபையினர்.

★ கும்பாபிடேக முதல் மண்டலாபிடேகம் வரை உற்சவ உபயங்களை ஏற்ற உபயகாரர்கள்.

★ இம்மலருக்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள், கட்டுரைகள், கவிதைகள் வழங்கிய பெரியோர்கள், மலரை அழகுற அச்சிட்ட குகன் பிரசுர நிலையத்தினர், புகைப்படங்கள் எடுத்துத்தந்த தெல்லிப்பழை தாசன் ஸ்ருடியோவினர், புகைப்பட ''புளொக்'' செய்து தந்த யாழ்ப்பாணம் ஞானம், கொழும்பு ஸ்ருடியோவினர்.

★ மேலும் வேண்டிய வேண்டியாங்கு எமக்கு சகல விதத்திலும் உதவிகள் செய்த அன்பர்கள்.

திருப்பணிச் சபையினர்

குகன் அச்சகம்,
தெல்லிப்பழை.

153